G - 25620 MM 3rd Reading T-08


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2020/64 - 2017 මැයි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.05.25

2020/64 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: MTR/LND/ACQVI/L2/3952.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின் றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின், பொல்ஹேன கிராம அலுவலர் பிரிவின் பொல்ஹேன கிராமத்தின் வரை படத்தின் இலக்கம் 820031 வலைய இலக்கம் 03 தாள் இலக்கம் 01 என குறிக்கப்படும் காணி ஒரு நாள் மீனவ படகுகள் நிறுத்தும் நிலையமொன்றை அமைப் பதற்கு எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**துண்டு இலக்கம் 515**

காணியின் பெயர்: பொலோகுன்னே அரப வரிமதிப்பு இலக்கம் 61A கடற்கரை வீதி; விபரம்: வீட்டுத்தோட்டம் கலப்புப் பயிர்ச் செய்கையையும் தற்காலிக கட்டிடத்தையும் கொண்டது; ஆரம்ப உரிமை கோருவோர்: லியனமானகே பார்னிஸ் அப்பு, இல. 56, கடற்கரை வீதி,பொலஹேன, மாத்தறை மற்றும் துடாவ ஹேவாகே சனுஜா நிலன்தி பொஹேனவத்த உடுபில, மிறிஸ்ஸ; விஸ்தீரணம்: 0.0402 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாத்தறை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

டி. டி. கே. விக்ரமஆரச்சி,
பிரதேச செயலாளர்,
மாத்தறை.

பிரதேச செயலகம்,
மாத்தறை,
2017, மே 19.

6 - 339

1A - G 25620 - 37 (2017/05)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பிழை திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: අත්/කඩු/119/ ශුඩීඡ්.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014, மார்ச் 04 ஆந் திகதிய 1852/10 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் III ஆம் பகுதியில் குறிப்பிடப் பட்ட ஆரம்ப வரைபட இல. 9359 இல் துண்டு இல. 01 முதல் 25 வரையிலான காணித் துண்டுகளில் துண்டு இல. 3, 4, 12, 13 மற்றும் 17 இல் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திருத்தப்பட்ட வரைபட இல. CO/KDW/2014/533

1. **துண்டு இல. 1**
காணியின் பெயர்: வீ பெட்டிதெனிய.

2. **துண்டு இல. 2**
காணியின் பெயர்: வீ பெட்டிதெனிய; விபரம்: மண்ணால் நிரப்பப்பட்ட வயல்; ஆரம்ப உரிமை கோருவோர்: ஐ. எம். சீ. டி. இத்தமல்கொட; விஸ்தீரணம்: 0.0778 ஹெக்டயார்.

3. **துண்டு இல. 3**
காணியின் பெயர்: வீ பெட்டிதெனிய; விபரம்: மண்ணால் நிரப்பப்பட்ட வயல்; ஆரம்ப உரிமை கோருவோர்: லோசனா அபேசுந்தர திஸாநாயக்க; விஸ்தீரணம்: 0.0726 ஹெக்டயார்.

4. **துண்டு இல. 4**
காணியின் பெயர்: வீ பெட்டிதெனிய; விபரம்: வயல்; ஆரம்ப உரிமை கோருவோர்: டப். ஆர். எம். திப்தி குமாரி பலல்லே; விஸ்தீரணம்: 0.0754 ஹெக்டயார்.

5. **துண்டு இல. 5**
காணியின் பெயர்: வீ பெட்டிதெனிய; விபரம்: வயல்; ஆரம்ப உரிமை கோருவோர்: சமிலா பிரிய தர்சனீ குமாரி கண்ணங்கர; விஸ்தீரணம்: 0.1064 ஹெக்டயார்.

6. **துண்டு இல. 6**
காணியின் பெயர்: வீ பெட்டிதெனிய; விபரம்: வயல்; ஆரம்ப உரிமை கோருவோர்: டி. ஆர். ஏ. எம். மல்லவஆரச்சி; விஸ்தீரணம்: 0.1032 ஹெக்டயார்.

பிரதேச செயலாளர்,
கடுவலை பிரதேச செயலகம்,
மாலபே.

6 - 340/1

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: කඩු/අත්/129/ ශුඩීඡ්

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1991/55 ஆம் இலக்க 2016.11.04 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (460) ஆம் அத்தியாயம் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் ஆரம்ப வரைபட இல. கொ. 9578 துண்டு இல. 136 இன் விஸ்தீரணம் 0.0020 ஹெக்டயார் ஆக திருத்தம் செய்கின்றேன்.

புத்தி தரங்கா கருணாசேன,
பிரதேச செயலாளர் (ப. க.),
கடுவலை.

பிரதேச செயலகம்,
கடுவலை.

6 - 340/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.